ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் |
| திகதி | 2020.07.10 |

## கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்காக மத்திய வங்கி ரூ.60 பில்லியனுக்கும் கூடுதலான தொழிற்படு மூலதனக் கடன்களுக்கு ஒப்புதலளித்திருக்கிறது

2020 யூன் 10ஆம் திகதியுடன் முடிவடைந்த இவ்வார காலப்பகுதியில் ரூ.6,978 மில்லியன் தொகை கொண்ட 2,066 புதிய கடன்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதலுடன் 2020 யூலை 10ஆம் நாள் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கி சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிர்ப்பு வசதியின் கீழ் ரூ.60,250 மில்லியன் கொண்ட 22,306 கடன்களுக்கு ஒப்புதலளித்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் 2020 யூலை 09ஆம் நாள் உள்ளவாறு நாடளாவிய ரீதியில் 13,333 கடன்பாட்டாளர்களிடையே ரூ.30,526 மில்லியன்களைப் பகிர்ந்தளித்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் இலங்கை மத்திய வங்கி கொவிட்-19 தொற்றின் மூலம் மோசமாகப் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு 4 சதவீத வட்டியில் (ஆண்டிற்கு) உரிமம்பெற்ற வங்கிகளினூடாக தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிர்ப்பு கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதன்மூலம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மீளெழுச்சிப்படுத்துவதற்கு உதவியளிக்கப்படுகிறது. இக்கடன்திட்டமானது சுயதொழில் மற்றும் தனிப்பட்டவர்கள் உட்பட, ரூ.1 பில்லியனுக்கும் குறைவான ஆண்டு மொத்த புரள்வினைக் கொண்ட கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கும். ஆண்டு மொத்தப் புரள்வான இவ்வரையறை சுற்றுலா, ஏற்றுமதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான வசதி ஏற்பாட்டு வழங்கல்களுடன் தொடர்பான தொழில்களுக்கு ஏற்புடைத்தாகாது.

கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தொழில்களும் தனிப்பட்டவர்களும் மேற்குறிப்பிடப்பட்ட கடன் திட்டங்களின் கீழ் தமது கடன் விண்ணப்பங்களை தொடர்பான வங்கிகளுக்கு 2020 ஓகத்து 31 வரை சமர்ப்பிக்கலாம்.

“சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிர்ப்பு வசதி” கடன் திட்டம்
2020.07.10இல் உள்ளவாறான முன்னேற்றம்

| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் | இலங்கை மத்திய வங்கியினால் பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் | | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன் | |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **பெறுமதி (ரூ.மில்.)** | **எண்ணிக்கை** | **பெறுமதி (ரூ.மில்.)** |
| அமானா வங்கி | 69 | 615 | 65 | 564 |
| இலங்கை வங்கி | 2,987 | 7,460 | 2,229 | 5,508 |
| கார்கில்ஸ் பாங்க் | 10 | 94 | 7 | 72 |
| சிற்றி பாங்க் | 4 | 88 | 4 | 88 |
| கொமர்ஷல் பாங்க் | 3,949 | 17,148 | 2,226 | 8,372 |
| டொயிஷ் பாங்க் | 6 | 140 | 6 | 140 |
| டிஎவ்சிசி பாங்க் | 620 | 1,394 | 389 | 825 |
| ஹபீப் பாங்க் | 1 | 25 | - | - |
| எச்டிஎவ்சி | 27 | 27 | 3 | 3 |
| அட்டன் நஷனல் பாங்க் | 2,293 | 9,187 | 406 | 1,725 |
| கொங்கொங் அன்ட் சங்கி பாங்கிங் கோப்பரேசன் | 17 | 363 | 9 | 181 |
| இந்தியன் பாங்க் | 14 | 137 | 12 | 134 |
| இந்தியன் ஓவசிஸ் பாங்க் | 2 | 27 | 2 | 27 |
| முஸ்லிம் கொமர்ஷல் பாங்க் | 14 | 164 | 4 | 79 |
| நஷனல் டெவலப்மன்ட் பாங்க் | 647 | 2,079 | 402 | 1,171 |
| நேஷன் ரஸ்ட் பாங்க் | 184 | 1,413 | 140 | 1,073 |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் | 212 | 618 | 37 | 78 |
| மக்கள் வங்கி | 4,660 | 6,958 | 3,379 | 4,040 |
| பப்பிளிக் பாங்க் பேர்க்காட் | 14 | 58 | 13 | 55 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 3,371 | 1,660 | 2,090 | 920 |
| சம்பத் வங்கி | 1,704 | 6,037 | 1,039 | 3,334 |
| சனச டெவலெப்மன்ட் பாங்க் | 719 | 692 | 430 | 389 |
| செலான் வங்கி | 705 | 3,239 | 381 | 1,313 |
| சிறிலங்கா சேமிப்பு வங்கி | 5 | 34 | 4 | 28 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 21 | 89 | 21 | 89 |
| சான்டற் சாட்டற் பாங்க் | 4 | 64 | 3 | 39 |
| ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா | 5 | 79 | - | - |
| யுனியன் பாங்க் | 42 | 361 | 32 | 281 |
| **மொத்தம்** | **22,306** | **60,250** | **13,333** | **30,526** |